பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 04 சனிக்கிழமை 20.08.2022 கதிர் 287

### இது ரகசியம் அல்ல!

இதற்கு முன்னர் பதவியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளுமே - மைத்திரிபால சிறிசேன உட்பட - தத்தமது கட்சிகளின் அரசுகளை ஆட்சியில் வைத்திருந்தனர். அப்போது அவர்களுக்கும் அவர்களது அரசு தரப்பினருக்கும் இடையில் ☞2

# ஜனாதிபதியைச் சந்தித்த பாதுகாப்புப் பிரதானிகள்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளகர்த்தராகவும் பதவியேற்றதன் பின்னர் மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ☞2

# உத்தேச புதிய அரசை தாமதமின்றி நிறுவுக!

## ஜனாதிபதி ரணிலை நேரடியாகச் சந்தித்து மொட்டுக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்து



**கொழும்பு,ஓகஸ்ட் 20**

**நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு தரப்பினரையும் ஒன்றிணைத்துத் தாம் அமைக்க உத்தேசித்துள்ள புதிய அரசாங்கத்தை மேலும் தாமதமின்றி விரைந்து ஏற்படுத்தும்படி ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் மூத்த தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கோரியிருக்கிறார்கள்.** ☞11

### தேசியப்பட்டியல் எம்.பியாக

## நாடாளுமன்றுக்கு வருவார் கோட்டா?

தாய்லாந்தில் இருந்து இம்மாத இறுதியில் இலங்கைக்குத் திரும்பவுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார் என்று அறியமுடிகின்றது. ☞2

### வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரை

## 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி!



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்தமுதலிகே உள்ளிட்ட மூவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 90 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைகளை ☞11

# ரணிலுடன் மீண்டும் பேச்சு நடத்தத் தயார்

### சஜித் தெரிவிப்பு



பயனளிக்கும் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மீண்டும் பேச்சு நடத்த நான் தயார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார். ☞11

## வெடிப்பொருள்களுடன் பளையில் ஒருவர் கைது

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் வெடிப்பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் நபர் ஒருவரின் வீட்டில் வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருப்பதாக பளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து அந்த வீடு சுற்றிவளைக்கப்பட்டது.

அந்த வீட்டில் தேடுதலில் ☞2



## சஜித்தைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சங்குக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று மாலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. ☞2

## யாழ். மாவட்ட செயலருடன் ஐ.நா. பிரதிநிதிகள் சந்திப்பு



(ஆர்.கலையமுதன்)

ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பெங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் ☞2

## யாழில் புதிய கட்டடத் தொகுதியை திறந்துவைத்தார் கல்வி அமைச்சர்



(ஆர்.கலையமுதன்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய கற்கை நிலையத்தின் புதிய கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இக்கட்டடத் தொகுதியை நேற்றுக் காலை 10 மணியளவில் திறந்து ☞2

## வவுனியாவில் விபச்சார விடுதி முற்றுகை; நான்கு பேர் கைது



வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் விபச்சார விடுதி ஒன்று பொலிஸாரால் நேற்று மதியம் முற்றுகையிடப்பட்டது. இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். விடுதியில் இருந்து ரி 56 ரக துப்பாக்கிக்கான 30 ☞2

## யானை தாக்கிக் குடும்பஸ்தர் பலி மட்டக்களப்பில் தொடரும் சோகம்

காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ☞2

## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தமையை விட, இப்போதைய ஜனாதிபதி ரணிலில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவின் கை ஓங்கியுள்ள இந்த அரசுக்கும் இடையில் இருக்கும் உறவும் நெருக்கமும் புரிந்துணர்வும் உச்சமென்று தென்னிலங்கையின் பிரபல அரசியல் விமர்சகர் ஒருவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் ஆளும் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடு என்று ஓரிரு தினங்களுக்கு முன்னர் சில பத்திரிகைகள் உட்பட ஊடகங்களில் வந்து செய்தி முற்றிலும் தவறானது அல்லது அடிப்படை ஏதுமற்றது என்று விடயமறிந்த வேறு அரச உயர் வட்டாரம் ஒன்றும் உறுதிபடக் கூறியது.

புதிய ஆளுநர்கள் நியமனத்தில்தான் முரண்பாடு, உள்வீட்டுக்குள் குடுமிப்பிடிச் சண்டை என்ற சாரப்பட வந்த செய்திகள் முற்றிலும் தவறானவை என்றது அந்த மொட்டுக் கட்சி உயர் வட்டாரம்.

ஆளுநர்கள் நியமன விடயத்தில் ஜனாதிபதியும் மொட்டு கட்சியின் பிதாமகர் மஹிந்த ராஜபக்ஷவும் நேரடியாகத் தங்களுக்குள் பேசி ஒரு புரிந்துணர்வுக்கு வந்துள்ளனர், ஒன்பது ஆளுநர்களுமே மாற்றப்படுவர், அதில் மத்திய மாகாணம், தென் மாகாணம் உட்பட ஐந்து மாகாணங்களுக்கான ஆளுநர்களை மொட்டுத் தலைமை பரிந்துரை செய்யும், அதனை ஜனாதிபதி ரணில் ஏற்று நியமனங்களை வழங்குவார், வடக்கு, கிழக்கு உட்பட ஏனைய நான்கு மாகாணங்களுக்கும் ஜனாதிபதியே ஆளுநர்களை தேர்ந்தெடுப்பார் என முடிவாகியுள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை என்றது அந்த வட்டாரம்.

எனினும் வடக்கு ஆளுநர் தொடர்பில் ஜனாதிபதி ரணிலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தங்களுக்குள் கலந்தாலோசித்துள்ளனர் என பிறிதொரு தரப்புத் தெரிவித்தது. தங்கள் இரு தரப்புக்கும் உடன்பாடான – அதேசமயம், தமிழர் தரப்புகளையும் அனுசரித்துப் போகக்கூடிய – ஒருவரை வடக்குக்கு நியமிப்பது குறித்து பூர்வாங்கப் பேச்சுகள் இடம் பெற்றிருப்பதாக தெரிகின்றது.

மொட்டுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து ஆளுநர் பதவிகளையும் பெறுவதற்குக் கட்சிக்குள் போட்டா போட்டி, குழப்பங்கள் உள்ளன என்பதை ஒப்புக்கொண்ட மேற்படி மொட்டுக் கட்சி வட்டாரம், அது மொட்டுக் கட்சியின் உள் வீட்டுக் குழப்பம், அதை ஜனாதிபதி ரணில் – மொட்டுக் கட்சி இடையேயான குழப்பமாக அர்த்தம் பண்ணுவது அபத்தம் என்றும் சுட்டியது.

ஜனாதிபதி ரணிலுக்கும் மொட்டுக் கட்சிக்கும் – குறிப்பாக ரணிலுக்கும் மஹிந்திருக்கும் – இடையில் 'கெமிஸ்ரி' உச்சமான புரிந்துணர்வில் உள்ளது என்றும் –

அரசியலில் மூத்த, பழுத்த அனுபவசாலிகளான இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, அதிக விட்டுக் கொடுப்புக்கு இடம் அளித்து, நடந்து கொள்கின்றனர் என்றும் –

மொட்டுக் கட்சி மட்டங்களில் இருந்து தம்மைக் குறித்து நல்ல பரிந்துரைகளே மொட்டுக் கட்சியின் தலைமைக்குச் செல்லக் கூடியதாக சகல தரப்பினையும் 'எக்ஸ்ட்ரா' கவனம் எடுத்துக் கவனித்து, அரவணைத்து ரணில் நடந்து கொள்கின்றார் என்றும் –

அந்த வட்டாரம் மேலும் குறிப்பிட்டது.

அதுமட்டுமல்ல, சர்வ கட்சி அரசு, தேசிய அரசு, பல தரப்புகளையும் அரவணைப்பது என்றில்லாமல் மொட்டுக்கட்சியுடனேயே இந்த அரசைக் கொண்டு போனால் தமக்கு மிகவும் சுலபமானது, வசதியானது, இலகுவானது என ஜனாதிபதி ரணிலே இப்போது கருதும் அளவுக்கு நல்லுறவு உச்சமாக இருப்பதாகவும் அந்த வட்டாரம் கூறியது.

தமது அடுத்த பதவிக் காலத்தை உறுதிப்படுத்துவதற்கான காலடியை ரணில் ஸ்திரமாகத்தான் வைக்கிறார் என எண்ணத் தோன்றுகின்றது.

மொட்டுக் கட்சியின் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ தயாராவதற்கு முன்னர், இடைக்காலத்தில் அந்த இடம் மொட்டு கட்சியினால் ரணிலுக்கு வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அரசியலில் நரித் தந்தரசாலியான ரணில் விக்கிரமசிங்கள நிலைமையை புரிந்து கொண்டு, அதற்கேற்ப காய் நகர்த்துவார். அவர் யதார்த்தங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதில் வல்லவர். பார்ப்போம் நடப்பதை.....!

- மின்னல் -

## நாடாளுமன்றுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகவும், வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தேவையான இராஜதந்திர அந்தஸ்தைப் பெறுவதற்காகவும் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்காக வியத்மக அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கலாநிதி சீதா அரம்பேபொல தேசியப் பட்டியலில் இருந்து விலகவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவும் நாடாளுமன்றம் வந்தால், சபையில் உள்ள முன்னாள் ஜனாதிபதிகளின் எண்ணிக்கை மூன்றாக உயரும்.

## ஜனாதிபதியைச் சந்தித்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.ஆர். லமாஹேவாகே, இலங்கை கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் ஜெனரல் ரியர் அட்மிரல் அனுர ஏக்கநாயக்க ஆகியோர் ஜனாதிபதியை மரியாதை நிமித்தம் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் அவர்கள் வழங்கிவைத்தனர்.

## வெடிப்பொருள்களுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்ட போது 910கிராம் வெடிமருந்து கழற்றிய நிலையில் இரண்டு மோட்டார் குண்டுகளும், நல்ல நிலையில் மூன்று மோட்டார் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

அந்நபரைக் கைது செய்த பளை பொலிஸார் நேற்று அவரை கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்த இருந்தனர்.

## சஜித்தைச் சந்தித்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினருக்கும் முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதுடன் நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா நட்புறவையும் ஆதரவையும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டு மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு நாட்டுக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்கும் எனத் தூதுவர் தெரிவித்தார்.

## யாழ். மாவட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டேவிட் மஸ்னெக்யன் – கார் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் க.மகேசனை டேவிட் மஸ்னெக்யன் கார் சந்தித்தார். இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் உடனிருந்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரம் மற்றும் கடற்றொழிலுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து யாழ். மாவட்ட செயலரிடம் கேட்டறிந்தேன் என்று டேவிட் மஸ்னெக்யன் – கார் தெரிவித்தார்.

கடந்த 16 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பெங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் மஸ்னெக்யன் – கார், பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து வருகின்றார்.

## யானை தாக்கிக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யானைகட்டியவெளி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

மண்டூர் மூன்றாம் பிரிவிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி யோகநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டிலிருந்து வேளாண்மை வயலைப் பார்வையிடுவதற்காகச் சென்ற போது வீதியோரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்த யானை, அவரைத் திடீரெனத் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரியவந்தது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்றப் பதில் நீதிவானின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டமையுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் புதிய கட்டடத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தமையுடன் நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்தார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பீ.எம்.சீ. திலகரத்ன, திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் விபச்சார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றை முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.

இதன்போது விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கள், விடுதி முகாமையாளரான ஓய்வு பெற்ற இராணுவ வீரர் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் குறித்த விடுதியில் பொலிஸார் சோதனை செய்தால் அங்கிருந்து பெண்கள் தப்பியோடும் வகையில் சுவர் ஒன்றில் சூட்சுமமான முறையில் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டு இருந்தமை பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

மேலும் அந்த விடுதியில் பொலிஸார் சோதனை செய்த போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இயங்கு நிலையில் உள்ள ரி56 ரகத்தைச் சேர்ந்த 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

அந்த விடுதி ஓய்வுபெற்ற இராணுவ வீரருடையது என்று கூறப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# மரண அறிவித்தல்

தோற்றம் 02 • 02 • 1939

மறைவு 17 • 08 • 2022



## திரு இரத்தினம் கோபாலகிருஸ்ணன் (ஆசன்)

யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், சாவகச்சேரி, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கோபாலகிருஸ்னன் அவர்கள் 17-08-2022 புதன்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினம், அழகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம், அன்னலச்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவனேஸ்வரி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும், வனுஷ்யா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஸ்ஜா (கட்டார்), பிரியா (அவுஸ்திரேலியா), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயராஜ், அகிலேஸ்வரன், திருஞானசம்பந்தர், முகுந்தன், நிறஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரன்ராஜ், பிரிவின்ராஜ், மாதேஷ், விபித்திரா, ஜீவித்தா, நிதுக்சன், அனிஷ், கிரிஷ், கசிக்கா, அக்சிகா, டக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூபதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, சிவராணி, சிவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்21.08.2022 ஞாயிற்றுக்கிழமை Corner and Roads, Delhi Rd & Plassey Rd, North Ryde NSW 2113, Australia நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
சிவனேஸ்வரி(வனிதா) - மனைவி Mobile : + 61410771055
பிரிவின்ராஜ் - பேரன் Mobile : + 447917370023
அகிலேஸ்வரன் - மருமகன் Mobile : + 447944911230
திருஞானசம்பந்தர் - மருமகன் Mobile : + 97455547952
முகுந்தன் - மருமகன் Mobile : + 61402069165
கோபிராஜ் - மகன் Mobile : + 447465987533

# நாடாளுமன்றில் தமிழில் உரையாடுவதை தவிர்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

## திலீபன் எம்.பி. குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் பெயரை வைத்துக்கொண்டு தமிழில் உரையாற்றுவதில்லை என வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது வடமாகாண ஆளுநர் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநர் நியமிப்பது தொடர்பில் நான் கேள்விப்படவில்லை. சிறிதரன் கடந்த முறை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது வடமாகாண ஆளுநர் தமிழில் பெயரை வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார் என ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

நான் அவரிடம் ஒரு விடயத்தைக் கேட்க விரும்புகின்றேன். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழில் பெயரைக் கொண்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தமிழில் உரையாற்றுவதில்லை. முதலில் அவர் அதனைத் திருத்த வேண்டும்.

பல அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போதைய ஆளுநருடன் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால் என்னைப் பொறுத்தவரை தற்போதைய வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா எமது மாவட்டம் தொடர்பாகச் சிறப்பாகச் செயற்படுகிறார்.

முன்னாள் ஆளுநர் சாள்ஸ் அவர்களுக்கு எமது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் 150 இற்கு மேல் கடிதம் எழுதினேன். இதுவரை எந்த வித பதிலும் அனுப்பியதில்லை. வேலையும் நடக்கவில்லை.

ஆனால் தற்போதைய ஆளுநருக்கு கடிதம் அனுப்பினால் பதில் வருகின்றது. வேலையும் நடக்கிறது. அதனால் நான் 50 இற்கு மேற்பட்ட நன்றிக் கடிதங்களைக் கூட அனுப்பியுள்ளேன். தற்போதைய ஆளுநர் சிறந்த முறையில் செயற்படுகின்றார் என்றும் தெரிவித்தார்.

# அதிக வருமானம் பெறுகின்ற பயணிகளுக்காக கட்டுநாயக்கவில் வருகிறது தங்க மாவத்தை!

கட்டுநாயக்க விமான நிலையத்திற்குள் பிரவேசிக்கும் அதிக வருமானம் பெறும் பயணிகளுக்காக புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதிக வருமானம் பெறும் அல்லது வசதியானவர்களுக்காக தங்க மாவத்தை என்ற புதிய சேவை முனையம் திறக்கப்பட்டது.

அதிக வருமானம் பெறும் பயணிகள் இந்த ஓய்வறைக்குச் சென்று விமான நிலையக் கடமைகளைச் செய்ய வரிசையில் நிற்காமல் தங்கள் குடியேற்றம், சுங்கம், உணவு மற்றும் தகவல் தொடர்புத் தேவைகளை மிக விரைவாகப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

இந்த புதிய முனையத்துக்கு, ஒரு பயணியிடம் இருந்து 200 அமெரிக்க டொலர் வசூலிக்கப்படும், அந்தத் தொகையைச் செலுத்தி இந்த வசதிகளை ஒன்லைனில் பதிவு செய்யலாம்.

அதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதி முதல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து விமான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தை மறுசீரமைத்து அதன் பங்குகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மாற்றும் நோக்கத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

SPECIAL DISCOUNT 150,000/-
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலைத் தொழிற்சாலை
கோப்பித் தொழிற்சாலை
சுற்றுலா ஏற்பாடுகள்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பன்றியோடு சேர்ந்த கன்று

நாய் வேஷம் போட்டால் குரைத்துத்தானாக வேண்டும். வேறு வழி இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமையும் அதுதான்.

நாற்பத்தியைந்து வருட அரசியலின் முடிவில் ஜனாதிபதி பதவி எட்டாக்கனி என்ற பெருத்த ஏமாற்றத்துடன் அரசியலில் இருந்தே நிரந்தரமாக ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருந்த அவருக்குத் திடீர் அதிர்ஷ்டமாகக் கடைசி நேரத்தில் இலங்கையின் அரசியல் குழப்பம் கை கொடுத்தது.

யானை மாலை போட்டதனால் பிச்சைக்காரி ஒரு கணத்தில் மகாராணியான 'சரஸ்வதி சபதம்' திரைக்கதை போல, நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்திருக்கும் பொதுஜன பெரமுனவின் தலைமையின் பார்வை ரணில் மீது விழுந்ததால் அவர் ஜனாதிபதியாகிவிட்டார்.

இந்த ஜனாதிபதிப் பதவியை வைத்து நாடாளுமன்றத்தை தனித்துவமாகத் தம் கைக்குள் கொண்டு வரும் – தம் இஷ்டப்படி செயல்படுத்தும் விதத்தில் வளைத்து போடும் – நிலைமையில் அவர் இல்லை என்பதுதான் கள யதார்த்தம்.

ஆளும் பொதுஜன பெரமுனவினால், அவர்களுக்காக, அவர்களின் விருப்பில், ஜனாதிபதியாக்கப்பட்டிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. ஆகவே அவர்களின் ஜனாதிபதியாகவும் நடிக்க வேண்டிய – இயங்க வேண்டிய – கட்டாயம் அவருக்கு உண்டு. அதை அவர் கனகச்சிதமாக ஆற்றுகின்றார் என்பதையே இப்போது கட்டவிழும் செய்திகள், விடயங்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

தமது முன்னைய நல்லாட்சி அரசில் அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைத் தக்க வைத்த பிரதமராக ஓரளவு சுதந்திரமாகச் செயல்பட்டார்.

இப்போது அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதிதான். ஆனாலும் தமக்குத் தேவையான நாடாளுமன்ற வலிமைக்கு, தம்மைப் பதவிக்கு கொண்டு வந்த பொதுஜன பெரமுனவில்தான் அவர் முற்றுமுழுதாகத் தங்கி இருக்க வேண்டிய இக்கட்டு.

அதனால்தான் நல்லாட்சி அரசுக் காலத்தில் இருந்த அவரின் சுயாதீனமான செயற்போக்கை இப்போது முற்றுமுழுதான நிறைவேற்ற அதிகார ஜனாதிபதியாக அவர் இருக்கும்போது கூட அவரிடம் எதிர்பார்க்க முடியவில்லை. காண இயலவில்லை.

ஜெனிவாவில் கூடும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் விடயத்தில் அவரின் போக்கு நிலை மாற்றத்திற்கு இந்தச் சூழல்தான் காரணம்.

நல்லாட்சி அரசின் காலத்தில் பொறுப்பு கூறல் உட்பட்ட விடயங்களில் அங்கு இலங்கை விவகாரத்தைக் கையாளும் இணைத்தலைமை நாடுகளுடன் சேர்ந்து அவை இலங்கை தொடர்பாக முன்வைக்கும் பிரேரணைகளுக்கு இலங்கையும் சேர்த்து அனுசரணைப் பணி வகித்து ஒத்தோடும் தீர்மானத்தை எடுத்துச் செயல்படுத்திய ரணில், இப்போது முரண்டுபிடிக்கும் போக்கை சமிக்ஞை செய்கின்றார் .

அதற்குக் காரணம் இப்போது அவர் சேர்ந்திருக்கும் தரப்பு. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகம் கொண்டு வரக்கூடிய பிரேரணை விடயத்தில் அவற்றை எதிர்க்கும் போக்கை பின்பற்றுவது பொதுஜன பெரமுனவின் பௌத்த, சிங்களப் பேரினவாத பண்பியல்புக்குரிய சித்தாந்தம்.

அந்தக் கட்சியின் தயவில் ஜனாதிபதியாகி, அதிலேயே தங்கியிருக்கும் ரணிலினால், அக்கட்சியின் அடிப்படைப் பண்புப் போக்கில் இருந்து வெளியே வர முடியாது என்பதுதான் யதார்த்தம். அதைத்தான் அவர் செய்ய முடியும். செய்கிறார்.

# போராட்டக்காரர்களிடம் இருந்து நட்டஈடு கோரத் தயாராகிறது அரசு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்



காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் தங்கியிருந்த போராட்டக்காரர்களால் அந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டை, அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியை உரிமை கோரி ஒரு தரப்பால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படும் சட்டத்துக்கு அமைவாக நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் காலிமுகத்திடல் பகுதியில் இருந்து போராட்டக்காரர்கள் அகற்றப்பட்டுள்ளனர் எனவும், அரச சொத்துக்களைப் பலவந்தமாக எந்தவொரு தரப்பினரும் கையகப்படுத்த முடியாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு இழப்பீடு பெற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில், எதிர்வரும் காலங்களில் அமைச்சின் அதிகாரிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான நிலைமையை எதிர்நோக்கத் தமது அமைச்சின் அதிகாரிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சேதவிவரங்கள் தொடர்பில் முழுமையான மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தமக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# இலங்கைக்கான பயணத்தடை தளர்த்தியது பிரான்ஸ் அரசு !



இலங்கைக்கான அத்தியாவசியமான பயணங்களை மட்டும் பரிந்துரைக்கும் தீர்மானத்தை பிரான்ஸ் அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர கால நிலை மேலும் நீடிக்கப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த ஒரு நாளுக்குப் பிறகு, இந்த அறிவிப்பை பிரான்ஸ் அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

மேலும் பிரான்ஸ் அரசாங்கம் தனது குடிமக்களுக்கு இலங்கையில் பயணம் செய்யும் போது அதிக விழிப்புடன் இருக்குமாறும் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகங்களை நிர்வகிப்பதற்கு சிறந்த இடத்தில் இலங்கை இருப்பதோடு உள்ளூர் பயண நிறுவனங்களுடன் பயணத் திட்டங்களை முன்னோக்கிச் செல்லுமாறு பிரான்ஸ் அரசாங்கம் பயணிகளை வலியுறுத்தியுள்ளது.

# நேபாளத் தூதுவர் மற்றும் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளிப்பு!



ஆஸ்திரேலிய புதிய உயர்ஸ்தானிகர் மற்றும் நேபாள புதிய தூதுவர் தமது நன்சான்றிதழ் பத்திரங்களை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய புதிய உயர்ஸ்தானிகராக போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ் மற்றும் நேபாளத் தூதுவராக பாசூ தேவ் மிஷ்ரா ஆகியோரே இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது இவர்களுக்கு ஜனாதிபதிசெயலகத்தில்விசேடவரவேற்பளிக்கப்பட்டதோடு, அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதானிகள் இதில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தனிநபரொருவர் ஒரு மாதத்துக்கு வசிப்பதற்கு சராசரியாக 12 ஆயிரத்து 444 ரூபா போதும்!

இலங்கையில் தனிநபரொருவர், ஒரு மாதத்துக்கு வசிப்பதற்கு சராசரியாக 12 ஆயிரத்து 444 ரூபா போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்துக்கான அறிக்கையின்படி, தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்தபட்ச மாதச் செலவு 12 ஆயிரத்து 444 ரூபா எனக் குறிப்பிடப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் வசிப்பதற்காக ஒருவருக்கு அதிகபட்சமாக 13 ஆயிரத்து 421 ரூபா தேவைப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இது இலங்கையின் மாவட்டமொன்றில் நபரொருவர் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செலவிடும் அதிகூடிய தொகை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தின் வாழ்க்கைச் செலவு தேசிய மதிப்பீடாக 12 ஆயிரத்து 444 ரூபாவை விட 977 ரூபா அதிகமாகும்.

எனினும், இந்த அறிக்கைக்கு அமைய, மொனராகலை மாவட்டத்தில் வசிக்கும் ஒருவருக்கு தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு அங்கு வசிப்பதற்கு 11 ஆயிரத்து 899 ரூபா போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில், ஒருவர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்வதற்குத் தேவையான தொகை ஆயிரத்து 225 ரூபாவால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, பணவீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் 60.85 ஆக உயர்ந்துள்ளதுடன், உணவுப் பணவீக்கம் 90.9 சதவீதமானதாக உயர்ந்துள்ளது.

# இந்திய சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டை முப்படைகளும் உலகம் எங்கனும் கொண்டாடின



இந்தியா தனது 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், இந்திய கடற்படை, இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவையும் உற்சாகத்துடனும் இத்தினத்தை கொண்டாடுகின்றன.

இந்தியாவின் சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் 'ஆசாதி கா அம்ரித் மஹோத்'சவின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு கண்டத்திலும் (அண்டார்டிகாவைத் தவிர) வெளிநாட்டு துறைமுகங்களுக்கு இந்திய கடற்படைக் கப்பல்கள் நினைவுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஒவ்வொரு துறைமுகத்திலும் ஓகஸ்ட் 15, 2022 அன்று இந்திய கடற்படைக்கப்பல்களின் வருகையின் போது இந்திய தூதரகங்களால் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இந்தக் கப்பல்களில் இந்திய புலம்பெயர்ந்தோர் மற்றும் புகழ்பெற்ற உள்ளூர் பிரமுகர்கள் முன்னிலையில் மூவர்ணக் கொடியை ஏற்றுவது. இந்த நிகழ்வு ஆறு கண்டங்கள், மூன்று பெருங்கடல்கள் மற்றும் ஆறு வெவ்வேறு நேர மண்டலங்களில் இடம் பெற்றுள்ளது.

அந்தந்த நாட்டின் மூத்த தலைமைக்கு இந்தியக் கடற்படைக் குழுவினரின் உத்தியோகபூர்வ அழைப்புகள், அந்தந்த தூதரகங்களில் கொடியேற்றும் விழாவில் இந்தியக் கடற்படை அணிகள், காவலர்கள் பங்கேற்பது, ஒரு முக்கிய பொது இடத்தில் அல்லது கலைக் கூடத்தில் இசைக்குழு நிகழ்ச்சி, பார்வையாளர்களுக்கு திறந்திருக்கும் கப்பல், பள்ளி குழந்தைகள், புலம்பெயர்ந்த இந்தியர்கள் வருகை, டெக் வரவேற்பு மற்றும் இந்திய தூதரகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு கலாச்சார நிகழ்வுகள் என சுதந்திர தினத்தை ஒட்டி துறைமுக நகரங்கள் எங்கும் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன.

லண்டனில் கொமன்வெல்த் நினைவு வாயில்களில், இரண்டு உலகப் போர்களின் போது உச்சபட்ச தியாகம் செய்த இந்திய வீரர்களுக்கு ஐ.என்.எஸ். தரங்கிணி கடற்படைக் கப்பலின் குழுவினர் மரியாதை செலுத்தினர்.

இதேபோல், சிங்கப்பூரில் உள்ள க்ராஞ்சி போர் நினைவுச்சின்னம் மற்றும் ஐ.என்.ஏ. மார்க்கர் கப்பல் ஆகியவற்றில் அக்கப்பலின் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மாலை அணிவிக்கும் சடங்குகள் இடம்பெற்றன.

கென்யாவின் மொம்பசாவில் இந்தியக் கடற்படைக் குழுவினர், உலகப் போரின் கிழக்கு ஆபிரிக்கா பிரச்சாரத்தின் கீழ் பணியாற்றும் போது, இந்திய வீரர்கள் போராடி உயிர் தியாகம் செய்த டைட்டா தவேட்டா பிராந்தியத்தின் போர்க்களப் பகுதியில் நினைவு தூண் திறப்பு விழாவில் பங்கேற்று நினைவு நிகழ்வுகளில் பங்களித்தனர். முதலாம் உலகப் போரில் இந்திய வீரர்களின் பங்களிப்பையும் இந்தியாவின் சுதந்திரத்திற்கான போராட்டத்தையும் எடுத்துக்காட்டும் விதத்தில் போர்க்கள சுற்றுப்பயணங்கள், மொபைல் கண்காட்சி மற்றும் ஃபோர்ட் ஜீசஸில் ஓர் ஒளி மற்றும் ஒலி நிகழ்ச்சி ஆகியவையும் இடம் பெற்றன.

இந்திய விமானப்படை வீரர்களும் சுதந்திர தினத்தையொட்டி பல்வேறு நிகழ்வுகளில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

தமிழகத்தின் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையில் இந்திய ராணுவம் ஓகஸ்ட் 11 வியாழக்கிழமை அன்றே 75 அடி தேசியக் கொடியை ஏற்றியது. இது சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக அமைந்தது. நாடு முழுவதும் பல நடவடிக்கைகள் 76 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ வீரர்களும் சுதந்திர தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடினர்.

இந்தியாவின் 75 ஆவது ஆண்டு சுதந்திர 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்', இந்தியாவின் கடல்சார் தளங்களைப் புத்துயிர் பெறவும், மீண்டும் வலியுறுத்தவும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. இதை நோக்கி, இந்திய கடற்படையால் கடந்த ஓராண்டாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

2021 - 22 ஆம் ஆண்டில் 75 இந்திய துறைமுகங்களுக்கு நினைவுக் கப்பல் விருகை, குடியரசுத் தலைவரின் கடற்படை ஆய்வு, சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு, லோகயான் 2022 (பாய்மரக் கப்பல் பயணம்), மும்பையில் நினைவுச்சின்ன தேசியக் கொடியை காட்சிப்படுத்துதல், இந்தியாவின் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் சமூக நலத் திட்டங்கள் , பல்வேறு நகரங்களில் நடத்தப்பட்ட சுதந்திர தின நிகழ்வுகள், படகோட்டம், மலையேறுதல், சைக்கிள் ஓட்டுதல், இரத்த தான முகாம்கள், கடலோர சுத்திகரிப்பு முயற்சிகள், இந்தியாவின் வளமான கடல்சார் பாரம்பரியம் குறித்த கருத்தரங்குகள், நிகழ்வுகள், வீர விருது வென்றவர்கள் மற்றும் போர் வீரர்களுக்கு (1947 இல் அல்லது அதற்கு முன் பிறந்தவர்களுக்கு) பாராட்டுக்கள் போன்றன இவற்றை ஒட்டி மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிகழ்வுகளாகும்.



செங்கோட்டையில் தனது உரையைத் தொடங்கிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா ஒரு புதிய பாதையில், புதிய வலிமையுடன், புதிய உறுதிமொழியை எடுக்கும் வரலாற்று நாள் இது என்று சுதந்திர தினத்தைக் குறிப்பிட்டார். செங்கோட்டையில் தனது உரைக்கு முன்னதாக, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹோவிட்சர் பீரங்கிகளின் மரியாதைக்கு மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றினார். இதைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர்கள் மூலம் மலர் மழை பொழிந்தது. முன்னதாக பிரதமர் மோடி ராஜ்காட் சென்று அஞ்சலி செலுத்தினார்.



**(மூலம்: ஏ.என்.ஐ.)**



# தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற் சென்று நாட்டை மீட்டெடுக்க அனைவரும் முன்வர வேண்டும்



## ரோஸி சேனநாயக்க ஆலோசனை

நாட்டை மீட்டெடுக்க அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனிப்பட்ட அரசியல் லாபங்களை கைவிட்டு முன்வர வேண்டும் என்று கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அவர் -

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும், தற்போதுள்ள சவால்களை வெற்றிகொள்ள இதுவே இயலுமாக இருக்கும் என்று தான் உறுதியாக நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு சிக்கலில் உள்ள இந்தத் தருணத்தில் கட்சியைப் பாதுப்பது குறித்தோ அல்லது வாக்கு வங்கி குறித்தோ சிந்தித்து செயற்படக் கூடாது என்றும் நாளைய தினத்தை பற்றிச் சிந்தித்து நாட்டு மக்களை சிக்கலுக்கு உள்ளாக்கினால், அரசியலுக்கு வந்ததே பயனில்லாமல் போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சென்று நாட்டுக்காக செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது!

நாட்டின் இருவேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்புகளின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கஹவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கலலெல்ல பிரதேசத்தில் கஹவத்த பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 31 வயதுடைய கஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார். சம்பவம் தொடர்பில் கஹவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

இதேவேளை, ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பத்தம்பிட்டியபிரதேசத்தில்ரம்புக்கனை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 64 வயதுடைய பத்தம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த ஒருவராவார். சந்தேகநபர் மாவனெல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். சம்பவம் தொடர்பில் ரம்புக்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்று நடிகர் ஜாக்சனை பார்வையிட்டார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை காலை திடீரென கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வரும் பழம்பெரும் நடிகர் ஜாக்சன் அந்தோனியைச் சந்தித்தார்.

அநுராதபுரம், தலாவ ஏழாம் மைல் பகுதியில் காட்டு யானை மீது கப் வண்டி மோதியதில், ஜாக்சன் அந்தோனி படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வறட்சியினால் பாதிக்கப்பட்ட மஜ்மா நகருக்கு நீர் வழங்கல்







(எஸ்.எஸ்.அமீர்தகழியான்)

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மஜ்மா நகரில் வறட்சியினால் பாதிக்கப்பட்டு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய பிரதேச செயலாளரினால் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் அப்துர் ரஹ்மான் வீட்டுத்திட்டம், முஹைதீன் அப்துல் காதர் வீட்டுத்திட்டம், சிராஜிய்யா அரபுக்கல்லூரி, பிலால் பள்ளிவாசல் மற்றும் றஹ்மா ஜும்ஆ பள்ளிவாசல் போன்றவற்றிற்கு ஆரம்பக் கட்டமாக நீர்த்தாங்கி வைத்து குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

குடிதண்ணீர் வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக அனர்த்த சேவைகள் உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம், பிரதேச சபை சாரதி முஹம்மது ஜபீர் ஆகியோரும் பிரதேச பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டைச் செய்த தவிசாளர் ஏ.எல். நௌபர், ஓட்டமாவடி பிரதேச செயலார் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.சிஹாப்தீன், உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்ஹர், பிரதேச சபை உறுப்பினர், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அப்பகுதி மக்கள் சார்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம் நன்றி தெரிவித்தார்.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




1. **கேள்வி:-** கடைசியாக இந்தியாவின் எதிர்ப்பை நிராகரித்து, இலங்கை, சீனப் புலனாய்வுக் கப்பலை உள்ளேவர விட்டுவிட்டதே?

**பதில்:-** இலங்கை, இந்தியாவின் எதிர்ப்பை நிராகரித்ததா? அல்லது வேறேதும் வகையில் சமாளித்ததா? என்பது முதல் கேள்வி.

இந்தியாவின் எதிர்ப்பை நிராகரிப்பதால் வரும் ஆபத்தை அறியாத அளவுக்கு 'ரணில்' அரசியல் தெரியாதவரா? என்பது அடுத்த கேள்வி.

உள்நாட்டுப் பகை ஓங்கி நிற்கும் இவ் வேளையில் அயல்நாட்டுப் பகையையும் வாங்கி 'ரணிலால்' சமாளிக்க முடியுமா? என்பது மூன்றாவது கேள்வி.

ஏதோ ஒருசில ஒப்பந்தங்கள் செய்துதான் சீனக் கப்பலை உள்ளே விட்டதாய்ச் சொல்கிறார்கள். அந்த ஒப்பந்தங்கள் இந்தியாவைத் திருப்தி செய்வதாகத்தான் அமைந்திருக்கும் என்று கருதவேண்டியிருக்கிறது. ஆனால் ஒன்று, சீனா தன்னிடம் கையேந்தி நிற்கும் ஒரு ஏழைநாட்டுடனான ஒப்பந்தத்தினை மதித்து நடக்குமா? என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மொத்தத்தில் என்றைக்குப் பிறநாடுகளிடம் கையேந்திவாழவேண்டிவந்துவிட்டதோ, அன்றைக்கே நம் நாட்டின் சுயத்தன்மை போய்விட்டது என்பது தான் உண்மை. உள்நாட்டில் ஓர் இனத்திற்குரிய உரிமையை வழங்க மறுத்து, அவர்களுடன் போர் செய்யப்போய் பொருளாதாரத்தை வீணடித்துவிட்டு, இன்று பல வெளிநாடுகளுக்குத் தம் உரிமையை விற்கும் நிலைக்கு நம்நாடு வந்திருக்கிறது. பேரினவாதிகளின் கழுத்துக்கு வந்திருக்கும் கயிறு இது. இயற்கை அவர்களுக்குக் கொடுத்திருக்கும் தண்டனை என்றுதான் சொல்லவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இருபக்கமும் அடி வாங்கும் மத்தளமாய் ஆகியிருக்கும் இலங்கை மாட்டுமா? தப்புமா?**

2. **கேள்வி:-** எடுத்ததற்கெல்லாம் திருக்குறள், திருக்குறள் என்று பல்லவி பாடுவீர்களே. இன்றைய நமது நாட்டின் நிலைமை பற்றி திருக்குறளில் ஏதாவது சொல்லியிருக்கிறாரா உங்கள் வள்ளுவர்?

**பதில்:-** சொல்லாமல் இருப்பாரா என்ன? திருக்குறளில் 'நாடு' என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் எங்கள் நாட்டுக்காகவே எழுதியது போல, இரண்டு குறள்களைத் திருவள்ளுவர் எழுதியிருக்கிறார். அவற்றை ஒவ்வொன்றாய்ச் சொல்கிறேன். படித்தபிறகு வள்ளுவர் நமது நாட்டைப் பற்றியும் சொல்லியிருக்கிறாரா? இல்லையா? என்று நீங்களே சொல்லுங்கள்.

*** உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

இக்குறளில், அளவுக்கதிகமான பசியும், தீராத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராதிருப்பதே ஒரு நல்ல நாட்டின் இலட்சணம் என்கிறார் வள்ளுவர். எங்கள் நாட்டின் பேரினவாத அரசியலாளர்கள் வஞ்சனை இல்லாமல் போதிய அளவு இம் மூன்றினையும் இங்கு உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

*** பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும்**
**கொல் குறும்பும் இல்லது நாடு**

இக்குறளில், ஒன்றுடன் ஒன்று முரண்படும் வெவ்வேறு குழுக்களும், உடன் நின்றே தம்மை அழிக்கும் உட்பகையும், அரசனை வெறுக்கும் கொலைப் பாதகத் தன்மையுடைய பகையும் இல்லாதிருப்பதே நாடு என்கிறார் வள்ளுவர். இம் மூன்றும் கூட, நம்நாட்டில் நிறைந்து கிடக்கிறது. முதலில் இனமாக மக்களைப் பிரித்தார்கள், பின் தமக்குள்ளேயே தாம் முரண்பட்டார்கள், இன்று தம் தலைவர்களைத் தாமே அழிக்கும் அளவுக்கு அப்பேரினவாதிகள் கொதித்தெழுந்திருக்கிறார்கள்.

நம் நாட்டின் சிங்களத் தலைவர்களுக்கு வள்ளுவரைப் பிடிக்கவில்லையா? அல்லது அவரது கருத்துக்களைப் பிடிக்கவில்லையா? தெரியவில்லை. அநியாயத்திற்கு ஒரு நாடு பற்றி வள்ளுவர் சொன்ன நல்ல கருத்துக்களைக் கைவிட்டு எதிர்மறைக் கருத்துக்களைப் பிடித்துத் தொங்கி, இன்றைக்கு ஒட்டுமொத்த இலங்கையையும் மாற்றார் கைகளில் கொடுத்துவிட்டு மனம் வாடுகிறார்கள். எல்லாம் காலம் செய்யும் கோலம். வள்ளுவர் இன்றும் வாழ்கிறார் என்பதற்கு நம் நாட்டினரும், நம் அரசியல்வாதிகளும் எதிர்மறைச் சான்றுகளாய் இருக்கின்றனர்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கம்பன் ஏமாந்தான் போல, இது வள்ளுவன் ஏமாந்த கதையோ!**

3. **கேள்வி:-** கூட்டமைப்புக்குள் இணைந்து இருந்துகொண்டு, ஒற்றுமை பற்றிப் பேசும் சித்தார்த்தனும், அடைக்கலநாதனும் கூட்டமைப்பின் முக்கிய கட்சியாகிய தமிழரசுக்கட்சி தனித்து நிற்கத்தக்கதாக, வேறு கட்சிகளுடன் இணைந்து, ஐ.நா.வுக்கு அறிக்கை அனுப்பும் பிரேரணையில் கையொப்பமிடுவது நியாயமா?





**பதில்:-** இதுபற்றி அவர்களிடம் தான் நீங்கள் கேட்க வேண்டும். ஒரு உண்மையை நாம் மறுக்கமுடியாது. கூட்டமைப்பில் இணைந்திருக்கும் கட்சியினர் எல்லோரும், பெரும்பாலும் புலிகள் கொடுத்த நெருக்கடியால் ஒன்றிணைந்தவர்கள் தான். புலிகள் காலத்தில் பதுங்கிக் கொண்டு இருந்து எல்லாவற்றிற்கும் தலையாட்டியவர்கள் புலிகளின் மறைவுக்குப் பின் தலைநிமிர்த்தி 'சுயம்' பேணப்பார்க்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இவர்களோ மனம் நிறைய வெறுப்புடன் சேர்ந்திருந்து கொண்டு, கூட்டமைப்பு என்ற வார்த்தையையே இழிவு செய்கிறார்கள்.

எப்போதெல்லாம் கூட்டமைப்புக்கு வீழ்ச்சி வருகிறதோ, அப்போதெல்லாம் எதிரணியில் போய் நின்றுகொண்டு நாம் அங்கில்லை என்பது போல கை உயர்த்தி நிற்கும் சித்தார்த்தனையும், அடைக்கலநாதனையும் புரிந்து கொள்ளமுடியவில்லை. முன்பு 'தமிழ்மக்கள் பேரவை' இரகசியமாய் அமைக்கப்பட்டபோது, கூட இருந்தவர்களுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் அங்கு நின்றவர்கள்தான் இவர்கள். பின்பு அங்கு நடந்த கதை அனைவருக்கும் தெரிந்ததே.

ஒன்று தமிழரசுக்கட்சியை வெறுத்து, கூட்டமைப்பிலிருந்து வெளியேறவேண்டும். அல்லது, உண்மை மனதுடன் கூட்டமைப்பில் ஒன்றுபட்டு இருக்கவேண்டும். இவ்விரண்டையும் இவர்கள் செய்வதாயில்லை. கூட்டமைப்பில் இவர்களது இடம் வெளியானாலும் கூட்டமைப்பு நின்றுபிடிக்கும். ஆனால் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறினால் கூட்டமைப்பு நின்றுபிடிக்குமா? என்பது பற்றியும் இவர்கள் இருவரும் சிந்திப்பது நல்லது. ஏற்கனவே முன்னாள் முதலமைச்சரை நம்பி வெளியேறியவர்கள் இப்போது 'முழிபிரட்டிக்கொண்டு' இருக்கிறார்கள். அது தெரிந்தும் இவர்கள் நடத்தும் கூத்து இவர்களுக்குத்தான் ஆபத்தாய் முடியப்போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் போன வாரம் தான் இவர்களில் ஒருவரைப் பாராட்டினார். இந்த வாரம் குட்டுகிறார். இவரும் அவர்களைப் போலத்தானோ?**

4. **கேள்வி:-** அண்மையில் நீங்கள் ஆர்வத்துடன் பார்த்து வரும் தொலைக்காட்சி நாடகங்கள் பற்றிச் சொல்லுங்களேன்?

**பதில் :-** இடையிடையே இப்படிப்பட்ட கேள்விகளுக்கும் பதில் எழுதவேண்டித்தான் இருக்கிறது. எந்தநேரமும் 'சீரியஸாய்' இருப்பவர்களை எனக்கே பிடிப்பதில்லை. அதனால், உங்களுடைய இந்தக் கேள்விக்கு சந்தோஷமாகப் பதில் சொல்லப்போகிறேன்.

அண்மைக்காலமாக தொலைக்காட்சியில் மூன்று நாடகங்களைப் பார்த்து வருகிறேன். அவற்றில் நீண்டகாலமாக நான் பார்த்து வருவது 'சுந்தரி' என்கின்ற நாடகம். பாதிக்கப்பட்ட ஒரு பெண் தலைவியை வைத்துப் பின்னப்பட்ட கதை அது. ஆரம்பத்தில் மிக சுவாரஸ்யமான திருப்பங்களுடன் அந்த நாடகம் கொண்டு செல்லப்பட்டது. அக்கதையின், கருமை நிற நாயகி நடிப்பால் உள்ளத்தை ஈர்த்தார். அவரை மையமாக வைத்து பின்னப்பட்ட பாத்திரங்கள் அனைத்துமே உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இடைக்காலத்தில் திருப்பங்கள் சுவைதரும் என்பதற்காக, அளவுக்கதிகமான திருப்பங்களை உண்டாக்கி, இந்நாடகத்தைக் கொஞ்சம் 'போர்' அடிக்க வைத்தார்கள். இப்போது 'கிளைமாக்ஸை' நெருங்க நெருங்க நாடகம் பழைய படி சூடுபிடிக்கிறது.

'சுந்தரி' சோர்வடைந்த இடைக்காலத்தில் 'கயல்' உள்ளத்தை ஈர்க்கத் தொடங்கினாள். கே.பாலசந்தரின் 'அவள் ஒரு தொடர்கதை' திரைப்படத்தை நினைவூட்டும் கதையாக இக்கதை அமைந்திருக்கிறது. அதுவும் ஓர் ஆளுமைப் பெண்ணை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்ட கதைதான். பொறுப்பற்ற குடும்பத்தை ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியில் விழவிடாமல் தாங்கி நிற்கும் அந்த நாடகத்தின் தலைவியும், அவளது நாங்கித்தனமும் இந்நாடகத்தைத் தொடர்ந்து பார்க்க வைக்கின்றன.

அண்மையில் என்னை 'எதிர்நீச்சல்' எனும் நாடகம் ஈர்த்திருக்கிறது. கொஞ்சநஞ்ச ஈர்ப்பல்ல. அப்படி ஒரு ஈர்ப்பு! ஆணாதிக்கம் மிகுந்த ஒரு குடும்பத்திற்குள் அகப்பட்டுத் தத்தளிக்கும் நான்கு பெண்களைப் பற்றிய கதை. அந்தக் குடும்பத்தின் நான்கு சகோதரர்களை திருமணம் செய்து, அவர்களின் கொடுமைகளை தாங்கி நிற்கும் பெண்கள் ஒவ்வொருவரும் நடிப்பால் ஈர்த்துத் தள்ளுகிறார்கள். அதில் மூன்றாவது சகோதரனின் மனைவியாக வரும் நடிகையின் வெகுளித்தனமான நடிப்பு தனி முத்திரையோடு திகழ்கிறது. அதே 'லெவலுக்கு' மற்றவர்களும் நின்றுபிடிக்கிறார்கள். மாமியார் கிழவியாக வரும் பழைய நடிகையின் முதிர்ச்சியான நடிப்பு வியக்கவைக்கிறது. ஆணாதிக்க ஆண்களாக வரும் மூவரும்கூட வித்தியாசமான பாத்திரங்கள்தான். மொத்தத்தில் எல்லோருமே 'சிக்ஸர்' அடிக்கிறார்கள். இப்போதெல்லாம் இரவு 9.30 மணிக்கு 'சன் ரி.வி'யில் வரும் இந்த நாடகத்தைப் பார்ப்பதற்காக தவம் கிடக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் கலக்கிறாருங்கோவ்..வ்..வ்.**

(10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்து மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்ய செல்வந்தர்களும் புலம்பெயர்ந்தோரும் உதவவேண்டும்!

## யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் அவசர கோரிக்கை






(கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மந்திரிமனை எதிர்வரும் மழைகாலத்தில் இடிந்து விழுந்துவிடுமோ என்கிற அச்சம் காணப்படுவதால் அதனை மீள்நிர்மாணம் செய்வதற்குத் தேவையான நிதியைப் பெற செல்வந்தர்களும் புலம்பெயர்ந்தவர்களும் உதவமுன்வர வேண்டுமென யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் அவசர கோரிக்கையை விடுத்தனர்.

யாழ் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் இந்த அவசர கோரிக்கையை விடுத்தனர்.

இதில் கருத்துதெரிவித்த யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் தலைவர் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் –

தற்போது எமக்குள்ள வசதி வாய்ப்பை மீள்நிர்மாணம் செய்யும் போது பல்வேறு தடைகள் ஏற்படுகின்றன.

மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்து சுற்றுலாத்தளமாக மாற்ற தொல்லியல் திணைக்களம் எங்களுக்கு அனுசரணை தந்திருக்கின்றது. இந்தப் பணியைச் செய்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றன. அந்தத் தடைகளைத் தாண்டி தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு அதனைச் செய்யவுள்ளோம்.

மரபுரிமை சின்னங்களினுடைய நில உரிமையாளர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். நில உரிமையாளர்கள் மரபுரிமை சின்னங்களை அழித்துவிட்டு வேறு பணியைச் செய்ய முடியாது. மரபுரிமை சின்னங்களினுடைய நிலங்களை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோ எங்களுக்குத் தந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

புனரமைக்க வேண்டிய முந்நூறுக்கும் மேற்பட்ட தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அரச அனுமதியோடு புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முயல்வதோடு தனவந்தர்கள் இவ்வாறான பணிகளுக்கு உதவமுன்வர வேண்டும். அரசியல் வேறுபாடின்றி அனைவரும் இதில் பங்கேற்று கைகொடுக்க வேண்டும் – என்றார்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கருத்து தெரிவிக்கையில் –

மந்திரிமனை அமைந்துள்ள நிலத்தைக் கொள்வனவு செய்து முற்று முழுதாக மீள்நிர்மாணம் செய்வதாக இருந்தால் 7 கோடி இலங்கை ரூபா செலவாகுமென மதிப்பிட்டுள்ளோம். மந்திரிமனை இடிந்துவிழாதவாறு உடனடியாக அதனைப் பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு 50 லட்சம் ரூபா தேவைப்படுமென மதிப்பிட்டுள்ளோம்.

செல்வந்தர்கள் மரபுரிமைச் சின்னங்கள் மீது அக்கறை கொண்டவர்கள் இந்தப் பணியில் கைகோர்க்கவேண்டும்.

செல்வந்தர்களிடமும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகளிடம் அமைப்புகளிடம் நாங்கள் மன்றாட்டமாகக் கேட்பது இந்த வேலைத்திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க உள்ளோம். உங்களால் இயன்ற நிதி உதவிகளை விரைவாக எமக்குத் தந்தால் அவற்றைச் செய்து கொள்ள முடியும். – என்றார்.

யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் தலைவர் வரலாற்று துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், மையத்தின் பதிப்பாசிரியர் வ.பார்த்திபன், மையத்தின் உறுப்பினரும் யாழ்.மாநகர முதல்வருமான வி.மணிவண்ணன் ஆகியோர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று சின்னங்களைப் பாதுகாத்து அதை மீள்நிர்மாணம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் மரபுரிமை மையம் என்கிற அமைப்பு கடந்த வருடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முக்கிய வழித்தடங்களில் வார இறுதி நாள்களில் சிறப்பு ரயில், பஸ் சேவைகளை ஆரம்பிக்க முடிவு!

முக்கிய வழித்தடங்களில் எதிர்வரும் செப்டெம்பர் முதல், வார இறுதி நாள்களில் சிறப்பு ரயில்கள் மற்றும் பஸ் சேவைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பொதுப் போக்குவரத்துக்கான தேவை அதிகரித்து வருவதால் பெரும்பாலான ரயில்கள் முன்பதிவு செய்யப்படுகின்றமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தனவும் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக வார இறுதி நாளகளில் விசேட ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்பு ரயில் சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், இரண்டு சோதனை ஓட்டங்கள் நிறைவடைந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், போக்குவரத்து அமைச்சு வேறு சில இடங்களுக்கு ஒருங்கிணைந்த ரயில் – பஸ் சேவையை அறிமுகம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களுடன் இணைந்து பெலியத்தவிலிருந்து கதிர்காமத்துக்கு பயணிக்கும் பயணிகள் மறுநாள் அதே பாதையில் திரும்பிச் செல்லும் வகையில் ஒன்றிணைந்த பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, அநுராதபுரத்துக்கு வார இறுதி ரயில் மற்றும் பஸ் சேவையும், எட்டு புனித தலங்களுக்கு செல்வதற்கு சிறப்பு பஸ் சேவையும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கண்டி, பாசிக்குடா மற்றும் கல்குடா போன்ற இடங்களுக்கும் இதேபோன்ற போக்குவரத்து திட்டங்களை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அலோசியஸின் நிறுவனத்துக்கு மீள வழங்கப்பட்டது மதுபான உரிமம்!

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜுன அலோசியஸுக்கு சொந்தமான டபிள்யூ. எம். மெண்டிஸ் அண்ட் கோ நிறுவனத்துக்கு கலால் திணைக்களம் மீண்டும் அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது.

மெண்டிஸ் நிறுவனத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட மூன்று அனுமதிப் பத்திரங்களில் இரண்டு மீண்டும் வழங்கப்பட்டுள்ளன எனக் கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி குறிப்பிட்டுள்ளார்.

எஞ்சிய உரிமத்தை எதிர்காலத்தில் வழங்க முடியுமா என்பது தொடர்பில் திணைக்களம் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு 100 கோடியே 50 லட்சம் ரூபாவிற்கும் அதிகமான வரியைச் செலுத்தத் தவறியமை காரணமாக, மேற்படி நிறுவனம் வைத்திருந்த மதுபான உற்பத்தி உரிமத்தை கலால் திணைக்களம் ரத்துச் செய்தது.

ரத்து செய்யப்பட்ட உரிமம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டதையடுத்து, இரண்டு ஆண்டுகளுக்குள் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தும் ஒப்பந்தத்தின் பேரில் கலால் திணைக்களத்தால் உரிமம் மீண்டும் வழங்கப்பட்டது.



அதே உரிமம் 01 ஜுன் 2021 அன்று மீண்டும் ரத்து செய்யப்பட்டது. இந்த அனுமதிப் பத்திரங்களை மீளப் பெறுவதற்காக கடந்த 16ஆம் திகதி சில முக்கியஸ்தர்கள் மெண்டிஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் கலால் திணைக்களத்துக்கு சென்றிருந்தனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உள்ளூர் மாபியாக்களினால் கடும் நெருக்கடியில் மக்கள்!

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் வேதனை

*உள்ளூர் மாபியாக்கள் காரணமாகப் பொது மக்கள் பாரிய சுமைக்கு உள்ளாகியுள்ளனர் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.*

*மேலும், உள்நாட்டில் முட்டை விலையைக் குறைக்க உடனடியாக முட்டையை இறக்குமதி செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -*

*இலங்கையில் பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை வர்த்தக நிலையங்களில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அண்மைமைக் காலமாக சில வியாபாரிகள் முட்டை ஒன்றை 70 ரூபாவுக்கு விற்பனை செய்வதால் முட்டையின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது.*

*நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தை வலுப்படுத்த அதிகாரிகள் விரும்பாத காரணத்தால் உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த பொறிமுறையும் இல்லை.*

*எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், கோழிகளுக்கு தங்கம் கொடுக்கப்படுவதில்லை. எனவே முட்டை விலையைக் குறைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.*

*முட்டையின் விலை அதிகரிப்பு காரணமாக முதியோர்கள், குழந்தைகள் மற்றும் ஏழைகள் அத்தியாவசிய புரதங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய போக்கு தொடர்ந்தால் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஜே.ஆரின் தளர்வு

**அங்கம் -98**

தமிழர் தேசம், தமிழ் பகுதிகள் என்ற ஒன்று இல்லை என சிங்கள, பௌத்த பேரினவாத யானையின் அம்பாரியில் ஏறி இருந்து கொண்டுதான் ஜே.ஆர். திரும்பத் திரும்பக் கூறினார். தமிழ் மக்கள் நாட்டின் ஏனைய மக்களைப் போல எல்லா உரிமைகளையும் அனுபவிக்கிறார்கள், அனுபவிக்கலாம் என இந்திரா காந்திக்கும், பின்னர் அவரது தூதுவர் பார்த்தசாரதிக்கும் அவர் உரைத்தார். இந்திராவின் அனுசரணையில் ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி மாநாடுகளிலும் அவர் நிலைப்பாடு எடுத்தார்.

அவரை அந்த யானையின் அம்பாரியில் இருந்து இறக்குவதற்கு யானையே அவரைத் தள்ளி விழுத்துவதற்கான வழிவகைகள் வகுக்கப்படும் என்ற பயங்களிலேயேதான் அவர் பின்னர் ஒப்பந்தத்தில்



வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த பாரம்பரிய தமிழர் தாயகமாக, தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமிழ் மக்கள் தேர்தலில் தந்த ஆணைக்கு அமைய ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டார். அத்தோடு வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது எனவும் பிரத்தியேகமாக உறுதியளித்திருந்தார். ஆனால் ஜே.ஆருக்கு அப்பொழுது இருந்த கஷ்டங்களாலும் உள்வீட்டுப் போட்டிகளாலும் இவை எல்லாவற்றையும் அமைச்சரவைக்கு பின்னாலும், நாடாளுமன்றத்துக்குத் தெரியாமலும்தான் அவர் முன்னெடுக்க வேண்டியிருந்தது.

அச்சமயத்தில் தமிழர் தரப்புக்களே அவருக்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களைத் தள்ளிய போது தனக்கே உரித்தான சாணக்கியங்களில் அவற்றால் வெற்றிகொடி கட்டினார் அவர்.

இன்று 45 வருடங்களின் பின் மாவட்ட சபைகள் ஊடாக பொருளாதார அபிவிருத்தி என்ற திட்டத்தைத் தனது மூதாதையர் ஜே.ஆர். போலவே, இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாத இன்றைய ஜனாதிபதி ரணில் முன்வைக்க, அதற்காகப் பேரம் பேசும் தமிழ் தரப்புகளை தமிழ் மக்கள் இப்போது பார்க்கிறார்கள்.

ஜே.ஆர். அமிர்தலிங்கத்திற்கு எழுதிய பதில் கடிதத்தின்படி, தமிழ் ஈழத்துக்கு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட, அரசியலைத்தான் முன்னெடுக்க நின்றனர். அன்றைய இளைஞர்கள் விடுதலை வேட்கையில் நின்றதால் அதனை அவர்களால் செய்ய முடியாமல் தவிர்த்தார்கள். இன்றைய கள நிலைகள் வேறு. அரசியல் தலைவர்கள் மக்களைக் கணக்கெடுக்கின்றார்களா என்பதை மக்களே கவனிக்க வேண்டும்.

இந்தப் பழைய தார்மீகங்களில் தமிழ் தேசம் இணைந்து கரைந்து போவதா அன்றில், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூறுவது மாதிரி 'தமிழ் மக்கள் 35 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக் கொண்டவற்றை தக்க வைத்து முன்னேற வேண்டும்' என்ற யதார்த்தத்திற்கு ஆவன செய்தல் அவசியமா என்பது அவர்கள் முன் இன்று பூதாகரமாக விரிந்து நிற்கிறது.

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளாலும் மனித உரிமை மன்றின் மூலம் சர்வதேச நாடுகள் தரும் அழுத்தங்களாலும் ரணில் கைதிகளை விடுவிப்பது, புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றை தடைகளில் இருந்து நீக்குவது போன்ற சில காலம் கடந்த, அழகு தரக் கூடிய தோற்றங்களை ஏற்படுத்தினாலும், சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் பரவணிக்குணம், அதன் இன வெறியின் பண்பியல்பு வழமை போல அவற்றை நடத்த விடாது.

காலிமுகத்திடலில் தமிழ் மக்களது தனித்துவம் ஓங்கி ஒலிக்காவிட்டாலும், தார்மீகங்கள் பலவும் பேசப்பட்டன. நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும், ஒற்றுமையாக முன்னேறுவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும் தமிழ்ப் புலம்பெயலாளரின் தடை பட்டியல்களில் சில நீக்கங்கள் செய்ய, அதைச் சிங்கள, பௌத்தத்தின் ஒரு பிதாமகர் குணராச அமரசேகர அது தப்பென்றும், அது சிங்கள, பௌத்த அதிகாரத்துக்கு சாவு மணியாகும் என்றும் குரல் எழுப்புகிறார்.

இந்திய ஒப்பந்தம் ஏன் தோற்றுப் போனது என்பதற்கு மதியுரைஞர் பாலசிங்கம் தனது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் சில காரணங்களை முன்



வைக்கிறார். தமிழ் மக்கள் தாங்கள் பெற்றுக் கொண்டவற்றை தக்க வைத்துக் கொள்ளாமல், இன்னும் கைகளைப் பிசைந்து கொண்டு, கானல் நீர் தேடி அலைவது போன்றவதற்கு பாலசிங்கம் கூறுபவற்



றைத் தவிர ராஜீவ் காந்தி, பாலசிங்கம், ஜே.ஆரை மீறிய காரணங்கள் பல இருந்தன. அவற்றை சிறிது பின்னர் பார்க்கலாம்.

தமிழீழத் தாயகப் பிரச்சினையும் கிலேகஹோனது அறிக்கை பற்றியும் பதிவிட்டமையை அடுத்து தமிழ் மக்கள் நடத்திய அரசியலைப் பற்றிப் பலர் விளக்கங்களும் அறிவுரைகளும் தந்தனர்.

தலைமுறையைச் சிந்திப்பவன் தேசியவாதி – அடுத்த தேர்தலைச் சிந்திப்பவன் அரசியல்வாதி, பணத்திற்கு மயங்கி



வியாபார அரசியலே நடத்தப்பட்டது, வியாபாரிகள் ஆக்கிரமித்த அரசியலுக்கு இடம் கொடுத்து, பண்பான அரசியலில் அவர்களது மக்களைக் காக்கவில்லை, அது மக்கள் மீது அதிகாரத்தை செலுத்துவதில்லை, அரசியல் என்பது மக்களுக்காகச் சேவை செய்வது, ஆசைகளை அறுத்துக் கொள்ளாதவர்கள் சரியான தொண்டனாகவோ சரியான தலைவனாகவோ இருக்க முடியாது, இவை புரியப்படவில்லை – எனப் பல சொல்லப்பட்டன.


தமிழ் மக்களுக்காக நடத்தப்பட்ட அரசியல்தான் என்ன என்று திரும்பிப் பார்த்தால், சிங்களப் பேரினவாதத்திற்கு எப்படித் தாக்குப் பிடிப்பது, மக்களின் வாழ்வாதாரத்துக்கான திட்டங்கள் என்ன ஒப்பற்றப்பட்டன என்பதுதான் சுதந்திர காலங்களில் இருந்து வரலாறாக வரும். மீண்டும் மீண்டும் அந்தப் பல்லவிகளை மீட்டுவதை தவிர்த்து, வட்டுக்கோட்டை தீர்மானத்தில் இருந்து எழுந்த சிலவற்றை, காலி முகத்திடல் வரை பேசப்பட்டவற்றை மேலோட்டமாகப் பார்க்கலாம்.

தமிழ் மக்களுக்கான அவரது மரபுவழி உயிலாகத் தந்தை செல்வா நாடாளுமன்றத்தில் 19 நவம்பர் 1976 இல் பேசி விட்டுச் சென்றவௌ கவனிக்கத் தக்கவை:–

"நாங்கள் சமஷ்டி (கூட்டாட்சி) இயக்கத்தினால் எங்களது இழந்த உரிமைகளை அடையலாம் என எண்ணினாலும் இப்பொழுது சமஷ்டியாலோ, கூட்டாட்சியாலோ அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை தெரிந்து கொண்டுள்ளோம். நாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்களினால் பிரிந்து செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். அப்படியானதை நாம் செய்யாத இடத்தில் தமிழ் பேசும் மக்கள் தாங்கள் இழந்துள்ள உரிமைகளை எப்பொழுதும் பெற்றுக் கொள்ள முடியாது. எங்களது மூதாதையர்கள் புத்திசாலிகள். அவர்கள் தங்களது ராஜதானிகளை வைத்திருந்தார்கள். இலங்கையின் சரித்திரத்தில் எங்களுக்கென்று ஓர் இடம் இருந்தது. நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று எமது இயக்கத்தினால் நாம் கேட்கவில்லை. இழந்துவிட்டவற்றை மீளப் பெறவே பாடுபடுகிறோம். எங்களது கட்சி இன்று தனி நாடு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இயங்குகின்றது. தனிநாடு ஒன்றை அடைவது இலகுவான காரியம் அல்ல. அது மிகவும் கஷ்டமானது. ஒன்றில் நாங்கள் அழிய வேண்டும். அல்லது சிங்களப் பேரின மக்களின் அதிகாரத்திலிருந்து விடுபட வேண்டும். அது நிச்சயம். ஆகவே எவ்வளவு முயற்சிகளும் செய்து இந்த பிரிவினையை நாம் அடைவோம். நாங்கள் சமஷ்டி அடிப்படையிலான குடியரசு அமைய வேண்டும் என கூறியமையை புறந்தள்ளி விட்டோம். எங்களது இயக்கம் வன்முறையற்றதாகவே இருக்கும்." – என்றார்.

இதற்கு சிங்கள பேரினவாதம் தந்த பதில்தான் 1977 கலவரம்.

எதிர்க்கட்சித் தலைவராக – தமிழ் மக்களின் பிரதிநிதியாக – எரிக்கப்பட்ட இடங்களை யாழ்ப்பாணம் சந்தையில் பார்வையிடச்சென்றபோதுபொலிஸ்காரர்களாலே தாக்கப்பட்டார் அமிர்தலிங்கம். பின் 18 ஆகஸ்ட் 1977 நாடாளுமன்றத்தில் 'நாம் நேற்றும் தாக்கப்பட்டோம்; இன்றும் தாக்கப்படுகிறோம்; நாளையும் தாக்கப்படுவோம். எங்கள் விடுதலையை நாங்கள் அடையாத வரை இதே நிலைமைதான் தொடரும்" – என அமிர்தலிங்கம் பேசி



னார். ஆனால் அவர் மறைந்தது தமிழ் மக்களது விடுதலைப் போராளிகளால்.

சீதா பிராட்டியார் கண்ட மாயமான் போல ஒரு கானல் தேசத்தை தேடி இராமனும் இலக்குவனும் மானின் பின் சென்று, சுக்கிரிவனை நண்பனாக்கி, வாலியை மறைந்திருந்து கொன்று,விபீஷணனை அரவணைத்து, கடைசியில் இராவணனையே அழித்து, இராமாயணத்தை தமிழ் மக்களும் நடத்தி, லங்காபுரியில் வாழ முடியாமல் தஞ்சங்கள் தேடி, அலைகிறார்கள்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். பல்கலை இராமநாதன் நுண்கலைக் கழகம் அரங்காற்று கட்புல கலைகள் பீடமாக தரமுயர்வு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைக் கழகம் 'சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடமாக(Sri Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts) தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜெயந்தவால் கடந்த 16ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு, அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கழகம், 1960 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி முன்னாள் தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் சு. நடேச பிள்ளையால், அவரது மாமனாராகிய சேர் பொன்னம்பலம் இராமநாதனின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. இராமநாதன் நுண்கலைக் கழகம், இராமநாதன் கல்லூரியுடன் இணைந்ததாக சுன்னாகத்துக்கு சமீபமாக மருதனார்மடத்தில் அமைக்கப்பட்டது.

தமிழ் தொல்சீர் இசை, பரதநாட்டியம் என்பவற்றை மேம்பாடடையச் செய்தல், தமிழ் பண்பாட்டுப் பேற்றின் தனித்துவம், அடையாளம் என்பவற்றை மேம்படுத்தல் - பரவச் செய்தல் என்பவற்றினூடாகக் கற்றலுக்கான ஓர் அரணாக அமைந்திருக்க வேண்டுமென்பதே இராமநாதன் நுண்கலைக் கழகம் அமைக்கப்பட்டதன் நோக்கமாக இருந்தது.

1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக யாழ்ப்பாண வளாகம் உருவாக்கப்பட்ட தொடக்க நிகழ்வின் போது இராமநாதன் நுண்கலைக் கழகமும் பல்கலைக்கழக முறைமைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்படுதல் வேண்டும் என்பதை இலங்கைக் குடியரசின அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ ரத்வத்தே டயஸ் பண்டாரநாயக்காவும், அப்போதைய கல்வி அமைச்சரும், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமாகிய கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மொகமட்டும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டனர்.

வட பிராந்தியத்தின் கலை, பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும், தமிழ்மொழியை மேம்பாடடையச் செய்வதற்கும், இந்தத் துறைகளில் ஆழமான ஆய்வை உறுதிப்படுத்துதற்குமாகவே இது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

1975 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்துடன் இராமநாதன் நுண்கலைக் கழகம் இணைக்கப்பட்டது. எனினும் அன்று முதல் இன்று வரை அது 'கழகமாகவே' இயங்கி வந்தது.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதற்காகவும், சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும் அதனை ஓர் உயர்நிலை நிறுவனமாக அல்லது பீடமாகத் தரமுயர்த்த வேண்டிய தேவையை உணர்ந்ததன் பின்னணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் சேர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவந்தது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 27 (I) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைவாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஒப்பமிட்டதன் படி வெளியிடப்பட்ட 2293/22 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மூலம் 'சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம் எனப் (Sri Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலின் படி, இசைத்துறை, வாத்தியத் துறை, நடனத்துறை, ஓவியத்துறை, சிற்பக்கலைத் துறை, நாடக அரங்கியல் துறை ஆகிய ஆறு துறைகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இசை (வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பண்ணிசை, மிருதங்கம்), நடனம் (பரதநாட்டியம்), சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் (நான்கு வருடங்கள்) எனும் நுண்கலைகளுக்கான இளங் கலைமாணிச் சிறப்புப் பட்டங்களை, இந்தப் பட்டப்படிப்பு பாடநெறிகளின் முன்னோடியான இராமநாதன் நுண்கலைக் கழகத்தினூடாக, வழங்கி வந்தது.

ஒவ்வொரு பாடநெறியாலும் வழங்கப்படுகின்ற இளம் நுண்கலைமாணிப் பட்டங்கள் தொழில் தகைமையுடையனவாகும். இந்தப் பட்டதாரிகள் சமூகத்தின் சவால்களுக்கும், தொழில் சந்தையின் எதிர்பார்ப்புகளுக்கும் தங்களைத் தயார்ப்படுத்தியவர்களாக இருப்பர். இதனால் இவர்கள் மிகச் சிறந்த முறையில் போதுமான வளங்களுடனும், போட்டித் தன்மையுடனும், தொழிற்றகைமை பெறத்தக்க வகையிலும் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும் என்ற நோக்கோடு தற்போது சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம் உருவாக்கப்பட்டுள்ளது.

# பாட்டும் நானே? ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**5. கேள்வி:-** ஈழத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான் சிதம்பரநாதன் மறைந்து ஓராண்டு ஆகப்போகிறது. அவர் உங்களது கழகத்தின் ஆதரவாளர் என்று அறிவோம். ஆனாலும் அவர் மறைவையொட்டி நீங்கள் வாய் திறக்காதது ஏனோ?

**பதில் :-** ஈழத்தின் புகழ்பெற்ற இசை வேளாளர்கள் அனைவரும் எங்கள் கம்பன் கழகத்தின் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டினார்கள். மறைந்த நாதஸ்வர வித்வான்களான என்.ஆர்.கோவிந்தசாமி, பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, பஞ்சாபிகேசன், என்.கே.பத்மநாதன், காரைநகர் கணேசன், கானமூர்த்தி, பிச்சையப்பா ஆகியோரும், தவில் வித்வான்களான என்.ஆர்.சின்னராசா, குமரகுரு, வாக்கன் கணேசன் போன்றோரும், வாழும் கலைஞர்களான நாதஸ்வர வித்வான்கள் என்.ஆர். சுந்தரமூர்த்தி, வி.கே. பஞ்சமூர்த்தி, கேதீஸ்வரன், நாகேந்திரன், எம்.பி.பாலகிருஷ்ணன், ரஜீவன், குமரன், பாலமுருகன், நாகரூபன் தவில் வித்வான்கள் ரவீந்திரன், உதயசங்கர், சுதாகரன், ரவி போன்ற பலரும் எங்கள் கழக விழாக்களில் அவர்கள் செலவிலேயே வந்து கலந்து சிறப்பிப்பார்கள். அவர்களில் எங்கள்மேல் பரிவுகாட்டியவர்களில் சின்னராசா அவர்களைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். ஞாபக மறதி காரணமாக துணை செய்தவர் களில் ஒருசிலரின் பேர்களை விட்டிருந்தால் அவர்கள் என்னை மன்னிப்பார்களாக!

நீங்கள் நாதஸ்வர வித்வான் சிதம்பரநாதன் பற்றிக் கேட்டதும், இவர்கள் பற்றிய நினைவெல்லாம் மனதில் படமாக ஓடுகிறது. மேற் சொன்னோரில் எனக்கு மிக நெருக்கமாக இருந்தவர்களில் ஒருவர்தான் எஸ். சிதம்பரநாதன். என்னை ஒரு சகோதரனாகவே அவர் நினைத்திருந்தார். சில நாள்களுக்கு முன்பு, நான் இறந்துவிட்டதாக ஒரு செய்தி இணையத்தளங்களில் பரவத் தொடங்கியது. அச் செய்தியைப் பார்த்துப் பதறிப்போன சிதம்பரநாதன் அது உண்மையா? என அறிய எங்கள் வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அண்மைக்காலமாக மாலைநேரங்களில் எனது இந்திய மாணவர்களுடன் இணைந்து திருவாசகம் முதலிய அருட்பாடல்களைப் பாடுவதை நாங்கள் ஒரு வழக்கமாக வைத்திருக்கிறோம். அந்த நேரத்தில் தொலைபேசி அடித்தால், தொலைபேசி 'ரிசீவரை' எடுத்து வைத்துவிட்டு பதில் அளிக்காமல் எங்கள் பஜனையைத் தொடருவோம். அப்படி நாங்கள் பஜனை பாடிக்கொண்டிருந்த போதுதான் சிதம்பரநாதனிடம் இருந்து தொலைபேசி வந்தது.

வழக்கம் போல 'ரிசீவரை' எடுத்து வைத்துவிட்டுநாங்கள் தொடர்ந்து பஜனை பாடினோம். என்னைப் பற்றி வந்த செய்தியும், தொலைபேசியில் கேட்ட தேவாரமும் ஒன்றிணைந்து, வந்த செய்தி உண்மைதான் என அவரை நம்பவைத்துவிட்டது. பஜனை முடிந்ததும் நான் தொலைபேசியில் தொடர்பு கொள்ள எனது குரல் கேட்டதும் அவரும், அவரது மனைவியாரும் கதறி அழுத அழுகையை என்னால் மறக்கவே முடியாது. அன்று அவர் கொட்டியவார்த்தைகள் இன்று நினைத்தாலும் என் நெஞ்சைக் கரைக்கின்றன. அவை என்னைப் பற்றிய புகழ் வார்த்தைகள் என்ற படியால் இங்கு அவற்றைத் தவிர்க்கிறேன்.

நாங்கள் யாழில் இருந்தபொழுது, எங்களை எதிர்ப்பலைகள் சூழ்ந்திருந்த ஒரு நேரத்தில், துணிந்து எங்கள் அழைப்பை ஏற்று எமது கம்பன் கோட்டத்தில் அவர் ஒரு கச்சேரி வாசித்தார். அப்போதைய எம்மீதான எதிர்ப்பலைகளுக்கு அஞ்சியதால், விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே மண்டபத்திற்கு வந்திருந்தார்கள். சபை நிரம்பாதது எனக்குப் பெரிய கவலை. ஆனால் அதுபற்றித் துளியளவும் கவலைப்படாமல், ஏதோ எனக்காக வாசிப்பவர் போல அன்று அவர் வாசித்த 'தேனுகா' இராகத்தையும் 'தெரியலேதுராமா' என்ற கீர்த்தனையையும் அந்தத் தரத்தில் இனி ஒருதரம் கேட்பேனோ? தெரியவில்லை. மங்களமான தோற்றத்தோடு மங்களவாத்தியம் வாசித்தவர் அந்தப்பெருமகன். என் உயிர் அனைய ஒரு நண்பரை இழந்துவிட்டேன்.

யனகழகத்தோடு தொடர்புடையவர்கள் இறந்தாலும் இப்போதெல்லாம் நீங்கள் ஏதும் எழுதுவதில்லையே என, பலரும் கேட்கிறார்கள். 'கொரோனா' காலத்தில் மாறி மாறி வந்த என் நெஞ்சுக்கு நெருக்கமானவர்களின் மறைவுகளால் அதிர்ந்து போனேன். அவர்களைப் பற்றி எழுத, எழுத என்னை ஏதோ அமங்கலம் சூழமாப்போல் ஒரு உணர்வு. அதனால் இனி எவர் பற்றியும் அஞ்சலி எழுதுவதில்லை என முடிவு செய்துவிட்டேன். அதனால்தான் என் அன்புக்குரிய சிதம்பரநாதன் பற்றியும் ஒன்றும் எழுதாமல் விட்டேன். சிதம்பரநாதனைப் போல ஒரு நாதஸ்வரவித்வானை நான் இனியும் சந்திக்கலாம். ஆனால் அவர்போல ஓர் அன்பனைச் சந்திப்பேனோ தெரியவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஒரு நாதஸ்வரத்தின் முகாரி ராகம்.**

# அமெரிக்க பாதுகாப்புச் செயலகம் இலங்கைக்குள் திடீர்த் தலையீடு!


## பிரித்தானிய இராணுவ ஆய்வாளர் தகவல்

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சீன ஆய்வு கப்பல் வந்துள்ள நிலையில், கப்பலை கண்காணிக்கும் தீவிர நடவடிக்கையில் அமெரிக்க அரசு உயர் தொழில்நுட்ப கருவிகளை பொருத்தியுள்ளதாக பிரித்தானிய இராணுவ ஆய்வாளர் கலாநிதி அருஸ் தெரிவித்துள்ளார்.

சீன கப்பல் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதனையும்மீறிதற்போதுஇலங்கை சீன கப்பலை நாட்டுக்குள் அனுமதித்துள்ள நிலையில், இந்து சமுத்திரத்தில் சீனாவின் கைகள் ஓங்கியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டாரில் நடந்த புகைப்படப் போட்டியில் இலங்கை இளைஞரின் புகைப்படம் தெரிவு






## குவியும் பாராட்டுக்கள்

கட்டாரில் இடம்பெறும் புகைப்படப் போட்டியில் இலங்கை இளைஞரின் புகைப்படமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதை சேர்ந்த ஜே. எம். பாஸிதின் என்ற இளைஞரின் புகைப்படமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்பட போட்டியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளமையுடன், இதில் தெரிவு செய்யப்பட்ட முப்பது புகைப்படங்கள் ஓகஸ்ட் 17 தொடக்கம் ஓகஸ்ட் 30 வரை கட்டார் அபுஹமூரில் உள்ள சபாரி மாலில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியில் புகைப்படங்களுக்கு மக்கள் வாக்களித்து மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது வெற்றியாளருக்கு 3 ஆயிரம் ரியால், இரண்டாவது வெற்றியாளருக்கு 2 ஆயிரம் ரியால், மூன்றாவது வெற்றியாளருக்கு 1,000 ரியால் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் என இரண்டு பிரிவுகளில் பரிசு வழங்கப்படவுள்ளதுடன், பல நாடுகளில் இருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## உத்தேச புதிய அரசை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரே ஜனாதிபதியை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர் என அறிய வந்தது.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராய்ச்சி, நாமல் ராஜபக்ஷ, சஞ்சீவ எதிரிமன்ன ஆகியோர் பொதுஜன பெரமுனவின் சார்பில் பங்குபற்றினர்.

ஜனாதிபதியின் பக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிரா அபயவர்த்தன மற்றும் சாகல ரத்நாயக்க, ருவான் விஜேவர்த்தன, ஷாமல் செனிவிரட்ன ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சர்வ கட்சி அரசோ, சர்வ கட்சி ஆட்சியோ, தேசிய அரசோ எது என்றாலும், மேலும் தாமதிக்காமல் விரைந்து அதனை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதியைக் கோரினர் எனத் தெரிய வந்தது.

ஜனாதிபதியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு மொட்டுக் கட்சி நிபந்தனையின்றி முழு ஒத்துழைப்பு தரும் என்று இந்தச் சந்திப்பின்போது உறுதி அளிக்கப்பட்டதாகவும் அறிய வந்தது.

விரைவில் நாடு திரும்பவிருக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உரிய சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை வழங்கும்படியும் மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோரினர் எனத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பு மிக நெருக்கமான நட்புறவு நிலையில் நடைபெற்றதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ரணிலுடன் மீண்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் –

“சிறப்புரிமைகள, வசதிகள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோக ரீதியாக தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்.

அரசு கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத் திட்டம் வடிவமைக்கப்படும்.

ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன்.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலர்களை அழிக்கும் செயற்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்கப்போவதில்லை.

தற்போது அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பப் பதவிகள் அவசியமில்லை – என்றார்.

மறுசீரமைப்புகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் விசேட கூட்டம், கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இதன்போது இடம்பெற்றது.

## 90 நாள்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் 19 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். முறையற்ற விதத்தில் ஒன்று கூடிய குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கறுவாத்தோட்டம், கொம்பனித்தெரு, பொரளை பொலிஸ் பிரிவுகள் மற்றும் களனிப் பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு என்பனவற்றால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைத் தவிர ஏனைய 16 பேரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2022இல் வெளியிடப்பெற்றது.